Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/48/2023**

# ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே!**

**அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும்**

**ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

திருச்சபை ஒரு அன்பின் சமூகம் எனவும் ஒன்றிணைந்து பயணித்து குறிக்கோளை அடைய வேண்டும் என்ற அறிவுரைகள் இக்காலக்கட்டத்தில் அதிகமாக கலந்துரையாடப்படுகிறது. சபையின் சிந்தனைகளும் செயல்பாடுகளும் இணைந்து பயணிக்கும் அடிப்படையில் அமைய வேண்டும் எனக் கூறுவதின் பொருள் இதுவே. ஒன்றிணைப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு இவைகளில் வேரூன்றி நின்று திருச்சபை ஒன்றிணைந்து பயணிக்கின்ற ஒரு அன்பின் சமூகம் ஆகும்போது தான் அது கூட்டொருங்கிய திருச்சபை ஆகிறது. இவ்வாண்டு அக்டோபர் மாதம் உரோமில் நடைபெற்ற ஆயர் பேரவையின் முக்கிய கருத்தும் இதுவாக இருந்தது. நமது மறை மாவட்டத்தை இப்படிப்பட்ட அன்பின் சமூகமாக கட்டி எழுப்பும் முயற்சியை நாம் ஒவ்வொரு நாளும் தொடர்ந்துகொண்டு இருக்கின்றோம்.

கடந்த செப்டம்பர் மாதம் 28 முதல் 30 வரை நடந்த மறைமாவட்ட மாமன்றத்தில் மறை மாவட்ட மக்கள் ஒட்டுமொத்தமாக பங்கேற்க வேண்டும் என திட்டம் போடப்பட்டிருந்தது. அதற்கான தயாரிப்பில் மறை மாவட்டத்திற்குட்பட்ட எல்லா நிலைகளிலும் செயல்படும் மக்களின் கருத்துக்களை கேட்கவும், கலந்துரையாடவும் தேவையான செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மறைமாவட்ட மாமன்றத்தின் நிகழ்ச்சி நிரல் தயார் செய்தது இதன் அடிப்படையில் ஆகும். குருக்களும், துறவிகளும், பொதுநிலையினரும் ஆகிய சுமார் எழுபது பிரதிநிதிகள் கலந்து கொண்ட மறைமாவட்ட மாமன்றத்தில் திறந்த மனநிலையுடன் கலந்துரையாடல்களும், கருத்து பரிமாற்றங்களும் நடத்த வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. மறை மாவட்ட ஒட்டுமொத்த மக்களின் குரல் இம் மாமன்றத்தில் ஒலித்தது. மறை மாவட்டத்தின் வரலாற்றில் முதன்முதலாக நடந்த இம்மாமன்றம் வெற்றி அடைய எல்லாவித ஆயத்தங்களும் நடத்திய பொறுப்பாளர்களுக்கும், ஜெபம் வழியாக ஆற்றலளித்த உங்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் நான் நன்றி கூறுகின்றேன்.

தக்கலை மறைமாவட்டத்தின் ஒற்றுமையினுடையவும் கூட்டு பொறுப்பினுடையவும் கொண்டாட்டத்தின் வெளிப்படுத்தலாய் மாறிய இம்மாமன்றம் “சீரோ மலபார் திருச்சபையின் பணியும் வாழ்வும் கால சூழலுக்கு ஏற்ப தக்கலை மறைமாவட்டத்தில்” என்ற முக்கிய தலைப்பை அடிப்படையாகக் கொண்டு; நமது கிறிஸ்தவ வாழ்வு, விசுவாசப்பயிற்சி, சபையின் பிறரன்பு பணிகள், மறைபரப்பு திருத்தொண்டுப்பணிகள், தகவல் தொடர்பு சாதனங்களின் நவீன முறையிலான பயன்பாடுகள் மறைமாவட்டத்தின் விரிவாக்கப்பட்ட இடங்களில் நடைபெறும் பலவிதமான செயல்பாடுகள், இன்றைய அரசியல் மற்றும் சமூக சூழ்நிலைகளில் கத்தோலிக்க விசுவாசிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்பாடுகள் போன்றவைகள் இம்மாமன்றத்தின் முக்கிய கருத்துக்களாக அமைந்தது. இம்மாமன்றத்தின் வழியாக உருவான கருத்துக்கள் மறை மாவட்டத்தின் செயல் திட்டங்களாக இனிவரும் நாட்களில் வெளியிடப்படும். அதற்குமுன் கூட்டத்தின் முக்கியமான சில கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள நான் இதை எழுதுகிறேன். இனி கூறப்படும் கருத்துக்கள் மறைமாவட்டத்தின் ஒட்டுமொத்த குரலாய் ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

1. நம்பிக்கை வாழ்வை புதுப்பித்தல்

நன்முறையில் செயல்படும் ஒரு விசுவாச பயிற்சி முறை நமது மறை மாவட்டத்தில் உண்டு. எனவேதான் ஆழமான அருள் அடையாள வாழ்வும் இச்சமூகத்தின் முன் வரிசையில் நின்று பணியாற்ற ஏராளமான பொது நிலையினரும் துறவறத்தாரும், பங்கு பணியாளர்களும் நமக்கு கிடைத்துள்ளது. நம் குடும்ப உறவுகள் நிலைத்து நிற்பதும் அதனால் தான் எனபுரிந்து கொள்ள முடிகிறது. எனினும் காலகட்டத்தின் தேவைகளை புரிந்து கொண்டு பல மாற்றங்களை மறைக்கல்வியில் கொண்டு வரவேண்டியது கட்டாயம் என மாமன்றம் கலந்துரையாடல் செய்தது. இதயத்தாலும், மனதாலும் கடவுளை அன்பு செய்ய பிள்ளைகளுக்கு நாம் உதவி செய்ய வேண்டும். இறைவார்த்தையையும் நற்கருணை நாதரையும் உள்ளார்ந்த உணர்வுடன் ஏற்றுக்கொள்ளவும், பெற்றுக் கொள்ளவும் அவர்களை ஆயத்தப்படுத்த வேண்டும். சபையில் ஈசோவை ஏற்றுக்கொள்ள தகுந்த முறையில் இளையோருக்கும், முதியோர்களுக்கும் வழிகாட்ட வேண்டும். இதை நிலைநிறுத்த பலவிதமான பயிற்சிகளும், வகுப்புகளும், கலந்துரையாடல்களும் பங்கு, மறைவட்டம், மறைமாவட்டம் சார்பாக பக்த இயக்கங்களின் தலைமையில் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும், குழந்தைகளுக்கும் ,துறவறத்தாருக்கும், பங்கு பணியாளர்களுக்கும் வழங்க வேண்டும்.

அடிக்கடி நடத்துகின்ற போட்டிகளும் நிகழ்வுகளும் போட்டிகளில் வெற்றி பெற வேண்டும் என்ற முயற்சிகளும் ஆர்வமும் நம்பிக்கைப் பயிற்சிகளுக்கு தடையாக அமைகின்றனவோ என மாமன்றம் ஆழமாக சிந்தித்து கலந்துரையாடியது. நமது மறைக்கல்வி வகுப்புகளில் மாணவர்களுக்கு இறை அனுபவத்தை அளிக்கக்கூடிய ஜெபத்திற்கான நேரங்கள் ஒதுக்கப்பட வேண்டும். மாணவர்கள் திருப்பலியில் பக்தியுடன் கலந்து கொள்ள தொடர் பயிற்சிகள் அளிக்க வேண்டும். நம்பிக்கைப் பயிற்சியை அளவிட வேண்டியது மாணவர்களின் அறிவை அளந்து கொண்டல்ல; மாறாக அவர்களின் நம்பிக்கை வாழ்வின் ஆழத்தையும், அகலத்தையும், பலத்தையும் ஆராய்ந்து கொண்டு அளவிட வேண்டும். எனவே, குடும்ப உறுப்பினர்களின் ஒட்டுமொத்த பங்களிப்பு விசுவாச பயிற்சியில் தேவைப்படுகிறது. குருத்துவ துறவற வாழ்விற்கான அழைப்புக்கு தகுந்த மதிப்பும் மரியாதையும் வழங்க வேண்டும்.

## 2. திருத்தொண்டுப்பணியில் பொது நிலையினரின் பங்கு

சபை இயல்பிலேயே திருத்தொண்டுப் பணியாற்றி வருகிறது. ஆகவே நற்செய்திக்கு சான்று பகரவும் கிறிஸ்தவ வாழ்விற்கு மக்களை ஈர்த்துக் கொள்ளவும் இறை வார்த்தையை பறைசாற்றும் உரிமையும், கடமையும் திருமுழுக்கு பெற்ற ஒவ்வொரு நபருக்கும் உண்டு. நமது மறை மாவட்டத்தில் விரிவாக்கப்பட்ட பல திருத்தொண்டுப்பணி பகுதிகளையும் நேரடியாக சந்தித்து நற்செய்தி பறைசாற்றுதல் இன்றைய அத்தியவசிய தேவையாகிறது. மீட்பின் நற்செய்தியை எல்லா மக்களும் கேட்பதற்கான உரிமைகளைப் பற்றியும் மாமன்றத்தில் ஆழமான படிப்பினைகள் நடத்தப்பட்டு மறைபரப்பு பணிக்காக முன் வரும் பொது நிலையினரின் புது முயற்சிகளை தொடர்ந்து செய்ய உடன்நின்று அவர்களுக்கு தேவையான உதவிகள் செய்ய வேண்டியதைப் பற்றி மாமன்றம் ஆலோசித்தது. நற்செய்தி பணிக்கு ஆர்வமுடைய பொதுநிலையினரை கண்டுபிடித்து அவர்களை ஒன்று சேர்த்து அவர்களுக்கு தேவையான பயிற்சியும் வழிகாட்டுதல்களும் வழங்கி ஆவியானவரின் அருள் கொடைகளால் நிரப்பப்பட்டு நற்செய்தி பணிக்காக இவர்களை அனுப்பி வைக்க இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் பொது நிலையினரை உள்ளடக்கி திருத்தொண்டுப்பணிக் குழுவானது உடனடியாக உருவாக்கப்பட்டது. விருப்பமுள்ள எல்லா பொது நிலையினரையும் நான் அதற்காக அழைக்கிறேன். மக்களின் கலாச்சாரம், மொழி, வாழ்க்கை முறை இவை தெரிந்து இருப்பதால் சாதாரண மக்கள் மத்தியில் எளிதாக நுழைந்து தியாக மனநிலையுடன் செயல்பட முடியும் அதனால் திருத்தொண்டுப் பகுதிகளுக்கு சென்று தங்கி பணியாற்ற நமது பொதுநிலையினர் முன் வர வேண்டும் .

ஒவ்வொரு பங்கும் பிறரன்பு பணிகளின் மையமாக அமைய வேண்டும். தொடர்ச்சியான கலந்துரையாடல்களும் பகிர்வும் நம்மிடையே உள்ள பொறுப்புகள் தொடர்பான சிந்தனைகளை தூண்ட வேண்டும். திருத்தொண்டு பணிகள் பற்றிய எண்ணங்களை அதிகப்படுத்த வேண்டும். திருத்தொண்டு பணித்தளங்களை அன்பு செய்யும் எண்ணங்கள் குடும்பத்தில் மலர வேண்டும். திருத்தொண்டு பணிக்கான செபங்களும், சேவைகளும் தினம் தோறும் உங்கள் வாழ்வின் ஒரு பகுதியாக மாற வேண்டும். பங்கு தளங்களில் திருத்தொண்டுபணி நிகழ்ச்சிகள் ஏற்படுத்த தேவையான ஏற்பாடுகளை ஊக்கப்படுத்த வேண்டும். எல்லா பங்கு தளங்களிலும் திருத்தொண்டு பணிகளுக்காக செபிக்க ஒரு செபக்குழுவை ஏற்படுத்தலாம். நம்பிக்கை பயிற்சிக்கு பின் இறையியல் வகுப்புகள் வழி; விவிலியம், திருச்சபை தந்தையர்கள் போன்ற தலைப்புகளில் அதிகாரப்பூர்வமான வகுப்புகள் கொடுக்கும் திறமை பொது நிலையினருக்கு வேண்டும். அதற்குத் தேவையான பயிற்சி பட்டறைகளை ஊக்கப்படுத்த வேண்டும். நற்செய்தி பறைசாற்றுவதற்கு மறைமாவட்டம் ஒன்றிணைந்து முயற்சிக்க வேண்டும்.

## 3. சீரோ மலபார் திருச்சபையின் சக்தியின் உறைவிடம்

ஒரே நேரத்தில் திருச்சபை மனிதத் தன்மையும், இறைத்தன்மையும் உடையது என்பதே திருச்சபையின் ஒற்றுமையின் அடையாளம். திருச்சபை சமூகத்தின் இந்த மனிதத் தன்மையை அடிப்படையாக கொண்டு மட்டுமே ஆர்வமுடைய திருத்தொண்டு பணிகளை செய்ய முடியும். நம்பிக்கை சமூகம் சக்தி பெறாவிட்டால் எல்லா இறை மக்களின் உரிமையும் கடமையுமான நற்செய்தி பணியை ஆர்வமுடன் தொடர இயலாமல் போகும். நமது மாணவர்களுக்கும், இளையோருக்கும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உருவாக்கவும், தொடர்ச்சியான பயிற்சி

அளிக்கும் வகையில் வாழ்க்கை வழிகாட்டி முகாம் நடத்திட வேண்டும். அரசு அலுவலகங்களிலும், பொதுநிறுவனங்களிலும் நம் பொது நிலையினரின் பங்கேற்பு அதிகமாக இருக்க வேண்டும். அது போலவே மனச்சாட்சியும் சேவை மனநிலையும் உடைய அரசியல் தலைவர்கள் நம் கூட்டத்திலிருந்து தோன்ற வேண்டும். சரியான படிப்பினைகள், தேடல்கள் இவற்றின் அடிப்படையில் இப்படிப்பட்ட அறிவுடைய பணிகளை செவ்வனே செய்ய ஆற்றல் படைத்தவர்களை மறைமாவட்ட அளவில் ஆயத்தப்படுத்த வேண்டும். மேல் குறிப்பிட்ட மூன்று தலைப்புகளின் அடிப்படையில் மறை மாவட்ட மாமன்றம் எடுத்திருக்கும் தீர்மானங்களை கடைபிடிக்க உங்கள் ஒத்துழைப்பும் ஜெபங்களும் நான் கேட்டுக்கொள்கிறேன். உலகின் ஒளியும் நிலத்தில் உப்புமாக மாறி இயேசுவுக்கு சான்று பகர்ந்து இணைந்து பயணிப்போம்.

முக்கியமான ஒரு கருத்தையும் நான் உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நமது மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்களுக்கு உதவி செய்வதும், அவர்களுடைய நலனில் கவனம் செலுத்துவதும் இறை மக்களின் கடமை ஆகும். இக் குறிக்கோளை முன்வைத்து திருச்சபையின் நியமப்படி 2022 மே மாதம் 1ஆம் நாள் முதல் குருக்களுக்கான தக்கலை குருக்களின் நலக் கூட்டமைப்பு (TPWA) நமது மறை மாவட்டத்தில் தொடங்கப்பட்டது. நோயால் பாதிக்கப்படும் குருக்களின் பராமரிப்பு அவர்களுக்கு தேவைப்படும் மருந்துகளுக்கான செலவு இவையெல்லாம் இந்த கூட்டமைப்பு வாயிலாக வழங்கப்படும். குருக்கள் தனிப்பட்ட முறையில் இதற்குரிய பங்களிப்பை வழங்குவதுடன் இதற்காக நன்கொடைகள் வழங்குவது ஒவ்வொரு பங்கின் கடமையுமாகும். இதை புரிந்து கொண்டு எல்லா பங்குகளும் வருடத்திற்கு ஒருமுறை அந்தப் பங்கில் இருந்து குருக்களுக்கு கொடுத்து வரும் ஒரு மாத சிறப்பு ஊதியம் (Extra) இந்த அமைப்பிற்கு வழங்க வேண்டும். நாள்தோறும் செலவுகள் அதிகரித்துக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் குருக்களுக்கு வழங்கும் ஊதியத்திலும் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2024 ஜனவரி மாதம் முதல் 12000 ரூபாய் குருக்களுக்கு வழங்க திட்டம் போடப்பட்டுள்ளது. இதற்கு ஏற்ப ஒவ்வொரு பங்குகளும் கொடுக்க வேண்டிய தொகை குருக்களிடம் கூறப்பட்டுள்ளது. நமது மறை மாவட்டத்திற்காக தன்னலமற்ற பணி செய்கின்ற குருக்களின் நலனுக்காக ஒத்துழைக்க வேண்டும் என உங்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன். அனைவருக்கும் வர இருக்கும் கிறிஸ்து பிறப்பினுடையவும் புத்தாண்டினுடையவும் வாழ்த்துக்களை உரித்தாக்கி கொள்கிறேன்.

இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
15.12.2023

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

✞ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

**குறிப்பு:** இச்சுற்றுமடலை 17.12.2023, ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகள் மற்றும் சிற்றாலயங்களில் வாசிக்க வேண்டும்.